விடுகின்ற பாங்கினை உலகெங்கணும் காணலாம். அப்படித்தான் தொழிற் சாலைகள், மற்றவைகள் வடசென்னைப் பகுதியிலும், அலுவலங்கள், கல்லூரிகள் போன்றவை தென்சென்னைப் பகுதியிலும் அமைந்திருக்கின்றன. தென் சென்னைப் பகுதியில் மக்கள் வாழ்கின்ற இடமாகவும், மேலும் மேலும் புதிய புதிய வீடுகள் எழுகின்ற பகுதியாகவும் அமைந்துள்ளது. வடசென்னையில் தொழிற்சாலைகள் நிரம்ப அமைந்துள்ளன. வடசென்னையிலே புதிய கல்லூரி வருவதற்கான முயற்சி எடுத்துக்கொள்ளப்படுகிறது.

(ஓர் உறுப்பினர் எழுந்தார்).

MR. DEPUTY SPEAKER : The Hon. Ministers reply is exhaustive.

அரசுக் கல்லூரிகளில் பி.காம். பட்டப் படிப்பு.

* 167 வினா—திரு. பி. எஸ். மணியன் : மாண்புமிகு கல்வி-உள்ளாட்சித் துறை அமைச்சர் தயவு செய்து கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) அரசு கல்லூரிகளில் பி.காம். பட்டப்படிப்பும் பயிற்றுவிக்கப்படு கிறதா ?

(இ) ஆம் எனில், எந்தெந்தக் கல்லூரிகளில் ?

மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன் : (அ) ஆம்.

(இ) 1. சரபோஜி அரசர் அரசினர் கல்லூரி, தஞ்சை.

2. அரசர், கல்லூரி, புதுக்கோட்டை.

3. பெரியார் ஈ. வே. ரா. கல்லூரி, திருச்சிராப்பள்ளி.

3. அரசினர் கல்லூரி, கோயம்புத்தூர்.

5. அறிஞர் அண்ணா அரசினர் (ஆண்கள்) கலைக்கல்லூரி, செய்யார்.

6. திரு. கொளஞ்சியப்பர் அரசினர் கல்லூரி, விருத்தாசலம்.

7. அறிஞர் அண்ணா அரசினர் (ஆண்கள்) கலைக்கல்லூரி, நாமக்கல்.

8. சிக்கண்ணா அரசினர் (ஆண்கள்) கலைக்கல்லூரி, திருப்பூர்.

9. அரசினர் கலைக்கல்லூரி, மேலூர்.

திரு. கு. அ. பொம்மன் : தலைவர் அவர்களே, நீலகிரி மாவட்டத்தில் உள்ள கலைக்கல்லூரியில் பி.காம். படிப்பை இந்த ஆண்டாவது நடத்த அரசாங்கம் முன் வருமா ?

மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன் : தலைவர் அவர்களே, 1972-73-ம ஆண்டு பி.காம். ஆரம்பிப்பதற்கு அனுமதி வழங்க வேண்டுமென்று பல்கலைக் கழகத்திடம் கோரிக்கை அனுப்பப்பட்டிருக்கிறது.

திரு. எஸ். வடிவேலு : தலைவர் அவர்களே, தமிழகத்தில் எத்தனை கல்லூரி களில் பி.காம். படிப்பு வசதி செய்யப்பட்டிருக்கிறது ? அவைகளில் தனியார் துறைக் கல்லூரிகள் எத்தனை ? அரசாங்கக் கல்லூரிகள் எத்தனை ?

மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன் : தலைவர் அவர்களே, அதுபற்றி முழு விவரக் குறிப்பு இல்லை. பி.காம். படிப்பு வசதி செய்ய பெரும் செலவு ஏற்படுகிறது. அரசினர் கல்லூரிகளில் பி.காம். இல்லாத குறையைப்போக்க சென்ற ஆண்டில் 9 கல்லூரிகளில் இப்படிப்பு படிக்க வசதி செய்துகொடுக்கப் பட்டிருக்கிறது. இந்த ஆண்டு 12 கல்லூரிகளில் பி.காம். படிப்பு வசதி செய்வ தற்கான செயற்குறிப்பு ஆலோசனையில் இருக்கிறது.

1972 சனவரி 31]

திரு. சு. துரைசாமி: தலைவர் அவர்களே, திருப்பூரில் உள்ள சிக்கண்ணா அரசினர் கலைக்கல்லூரியில் பி.காம். வகுப்பு தொடங்கப்பட்டிருக்கிறது. பி.காம். படிக்க நிறைய மாணவர்கள் வருகிறார்கள். ஆகவே, அங்கே மாணவர்களின் எண்ணிக்கையை அதிகரிக்க முயற்சி எடுக்கப்படுமா?

மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன்: தலைவர் அவர்களே, அதற்கான அடிப்படையான வசதியைப் பொறுத்து பல்கலைக் கழகம்தான் அனுமதி வழங்க வேண்டும். அவ்விதம் மாணவர்களின் எண்ணிக்கை அதிகமாக இருக்கிறது, எண்ணிக்கையை அதிகரிக்க வேண்டும் என்று பல்கலைக் கழகத்திற்குச் சுட்டிக்காட்டினால் தக்க அனுமதி கிடைக்கும்.

நடுநிலைப் பள்ளிகளின் தலைமையாசிரியர்கள்

* *168* **வினா.—திரு. பெ. சௌந்தரபாண்டியன்:** மாண்புமிகு கல்வி-உள்ளாட்சித் துறை அமைச்சர் தயவு செய்து கீழ்க்கண்ட வினாவுக்கு விடையளிப்பாரா:

பஞ்சாயத்து யூனியன்களில் உள்ள நடுநிலைப்பள்ளிகளில் தலைமை ஆசிரியர்களாகப் பணியாற்ற பி.டி. படித்தவர்களை நியமிக்கும் உத்தேசம் அரசுக்கு உண்டா?

மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன்: இப்பொருள் ஆய்வில் உள்ளது.

திரு. நா. வெ. குருசாமி: தலைவர் அவர்களே, உயர்துவக்கப்பள்ளி, செகண்டரி கிரேடு ஆசிரியர்கள் தலைமை ஆசிரியர்களாக இருக்கிறார்கள். நடுநிலைப்பள்ளிகளில் எல்லாம் பி.டி. படித்தவர்களை தலைமை ஆசிரியர்களாக நியமிக்கும் செயற்குறிப்பு ஏதாவது அரசின் பரிசீலனையில் இருக்கிறதா?

மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன்: தலைவர் அவர்களே, உயர்துவக்கப்பள்ளி, நடுநிலைப்பள்ளி போன்றவற்றில் பி.டி. படித்தவர்களை தலைமை ஆசிரியர்களாகப் போடுவது பொருத்தமானது என்ற கருத்து ஏற்றுக்கொள்ளப்பட்டு ஆய்வில் உள்ளது. பி.டி. படித்தவர்களைத்தான் எல்லாப் பள்ளிகளுக்கும் தலைமை ஆசிரியர்களாகப் போட வேண்டுமென்று ஆணையிடுகின்ற நிலைமை இல்லை. பி.டி. படித்தவர்களாக தலைமை ஆசிரியர்கள் இருந்தால் பள்ளியின் நிர்வாகமும், மாணவர்களின் தரமும் உயரும், நல்ல சூழ்நிலை ஏற்படும் என்பதால் அந்தக் கருத்து ஆராயப்பட்டு வருகிறது.

Polytechnics for women

* 169 *Q.*—THIRU N. DENNIS: Will the Hon. the Minister for Education and Local Administration be pleased to state—

(*a*) whether any Central grant has been received by the Women's Polytechnics in this State; and

(*b*) if so, the details thereof?

மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன்: (அ) ஆம்.